செம்தித் தாளாகப் பதிவுபெற்றது

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

உ
சிவமயம்

இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஷு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஎ] யாழ்ப்பாணம்:- இராக்ஷத ஷு வைகாசி மீ கூ-உ வெள்ளிக்கிழமை (23 - 5 - 1975) [இல : எ

உ
சிவமயம்

கார்த்திகை நட்சத்திர மடாலய தருமம்

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசை

நாள்:- வைகாசி மாதம் 13 - (27-5-75) செவ்வாய்க் கிழமை

இடம்:- சைவபரிபாலன சபையாரது நாவலர் ஆச்சிரம மண்டபம்

நிகழ்ச்சிகள்

முற்பகல்:- 10 — சிவபூசை
சிவபூஜா மண்டபத்தில் சிவபூசை.
10—12 மணி புராணபடனம்

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

சைவபரிபாலனசபைச்சரித்திரம்

(50ஆம் வருடப்பூர்த்திப் பொன்விழா மலரிற் பத்திரிகாசிரியர் கூற்று 1938)

(முன் வளர்ச்சி : 5)

VI யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

சைவமக்கள் கிறிஸ்து மார்க்கத்திலே சேர்தற்குப் பாதிரிமாருக்குச் சிறந்த துணையாகவுள்ளன அப்பாதிரிமார் வைத்து நடாத்திய ஆங்கில தமிழ் வித்தியாசாலைகளேயென்ற இரகசியத்தையுணர்ந்த நாவலரவர்கள் சில சைவ வித்தியாசாலைகளைத் தாமே தாபித்து நடத்தி வந்தார்கள் ஆங்கில வித்தியாசாலை யொன்றையும் வண்ணார்பண்ணையில் அந்தப்பெரியார் தாபித்துச் சிலகாலம் நடத்தினார் ஆனால் அது அக்காலத்தில் நீடித்து நடைபெறவில்லை அந்தக் குறையை நீக்க வேண்டுமென்று இந்தச் சபையார் நோக்கங்கொண்டு சைவாங்கில வித்தியாசாலையொன்றைத் தாபித்து நடாத்தத் தீர்மானித்தனர். இப்பொழுது யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி விளங்கும் நிலையத்திற்றானே சித. முத்துசுபதிச்செட்டியார் சமயோசிதமாக ஒரு விசாலமான சாலையை அமைப்பித்தார் இதற்கிடையில் சைவசமய பரிபாலனசபை என்ற நாமம பதுக்கிய சில பிரமாணங்களோடு சைவபரிபாலனசபை என்று மாற்றப்பட்டது. இச் சைவபரிபாலன சபையார் விகிர்தி வருடம் கார்த்திகை மாதம் கஉ (15-11-1890) கூடிய அதிகாரசபைக் கூட்டத்தில் ஸ்ரீ. சி. நாகலிங்கபிள்ளை தம்முடைய பராமரிப்பின் கீழிருந்த (Town High School) என்னும் பள்ளிக் கூடத்தை (Hindu High School) என்னும பெயரோடு நடத்திக்கொள்ளும்படி சபையில் ஒப்புவித்தனர். ஒப்புவிக்க இச்சபையார் ஏற்றுத் தங்களாற் சமையோசிதமாக அமைக்கப்பட்ட சாலையில் அப்பிள்ளைகளைத் தருவித்து நடாத்தி வருவாராயினர். (வளரும்)

அப்பர் பெருநாவிற் சிவத்தமிழ்ச் செல்வி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி இந்து மா மன்றம் திங்கட்கிழமை (5-5-75) திருநாவுக்கரசு நாயனார் குருபூசைத் தினம கொண்டாடிய பொழுது சிறப்புச் சொற்பொழிவாளராகக் கலந்துகொண்ட சிவத தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி "பல லாண்டுகள் இவ்வுலகில் வாழநது அனுபவம் பெற்ற அப்பர் தாய், தந்தை, மைத்துனர் ஆகியோரை இழந்து யாக்கை நிலைமையை உணர்ந்து சமணத்திற் சேர்ந்தார். பின்னர் சூலைநோயால வருந்தி மனமாற்ற மடைநதார். அவர் சைவததிற்குத் திரும்பி அஞ்சாமையோடு வாழ்தார். சமய நம்பிக்கை மிகுதியாயுள்ளவர்களுக்கு அச்சம் ஏற்படாது. இன்று பல இளைஞர்கள 'சீர்திருத்தம' என முழங்குகின்றனர், அன்று கோவிலுக்குளளே தொண்டு செய்து சீர்திருத்தம' முழங்கியவர் திருநாவுக்கரசர்" என்று கூறினார்.

கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய திரு. ஷண்முக குமரேசன் திருநாவுக்கரசரின் தேவாரத்தில இரக்கம மட்டுமல்ல வீரத்தையும காண்கிறோம் 'நாம் ஆர்க்கும் குடியலலோம் நமனை அஞ்சோம்' என்று வீரததோடு அவர் பாடினார் என்று கூறினார். செல்வன் வி. சிவகுமரான் நன்றிகூறினார.

அறிவியலும் கலையியலும்

—0—

கலைப்பகுதி தரம் குறைந்ததல்ல வேர்ட்ரான்ட்றசல், எடிக்ரன், வைட்ஹெட் போன்ற விஞ்ஞானிகள் அறிவு விருத்திக்கு இலக்கியம் தத்துவசாத்திரம் ஆகியவை அவசியமெனக் கண்டே அவற்றிலும் வல்லுநராய்த்திகழ்ந்தனர். விஞ்ஞானம் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்புகள் அதிகம். அதனாலேயே அதனையே பெரும்பாலோர் விரும்புகின்றனர்" என்று இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாணவளாக விஞ்ஞான போதனா பீடத்தலைவர் பேராசிரியர் பே. கனகசபாபதி அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் திரு. இ. சபாலிங்கம் அவர்களின் புதல்வி கலைச்செல்வியின் நடன அரங்கேற்றத்துக்கு தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் 20 - 5 - 75 அன்று நடைபெற்ற இவ் வைபவத்தில் தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது: "விஞ்ஞான சாதனை கூட்டு முயற்சி. சலை ஓதுதனி மனித மேதையின் சாதனை, நீயூட்டன் பிறந்திராவிட்டால் இன்னொருவர் அவர்கண்ட உண்மைகளை கண்டு பிடித்திருப்பார். ஆனால் காளிதாசன் பிறந்திருக்காவிட்டால் சகுந்தலம் என்னும் கலைச் செல்வம் உலகுக்கு கிடைத்தேயிராது, இப்படிச் சொன்னவர் அறிஞர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன். விஞ்ஞானதத்துவம் ஒன்றை ஒரு தடவை மட்டும் தான் படித்ததிய ஆர்வமிருக்கும். ஆனால் இலக்கியம், இசை, கலைகள் யாவும் மீண்டும் அனுபவிக்க இனிமை அதிகரிக்கிறது. இது இரண்டுக்குமுள்ள பிரதான வேறுபாடு கலைஉணர்வுக்கு இன்பந்தருகிறது மனித உள்ளத்தைப் புனிதப்படுத்துகிறது. இத்தன்மைகள் விஞ்ஞானத்துக்கில்லை"

[மேற்படி நடன அரங்கேற்றம் பற்றிய விமர்சனம் அடுத்த இதழில் இடம்பெறும்]

விபரீத ரூபமிருகம்

கைகள், கால்கள் விரல்கள் காதொன்று கொம் பொன்று, தாடி, ஒளிவிளங்கும் கண்ணொன்று இவைபொருந்திய ஒரு விபரீத ரூப மிருகத்தை தென் இரன் சேனியா தேசத்தில் கடலிலே ஒருமாலுமி கண்டு கைப்பற்றினர் என்று அந்நாட்டுச செய்தி ஒன்று கூறுகின்றது.

நாவலரும் கோயிலும்

தொகுத்து அளித்தவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்.

[எழுதி உதவியவர் சி. சீவரத்தினம்.]

(2) கோயில் (நல்லூர்)

(முன் வளர்ச்சி — 9)

மூலமூர்த்தி இல்லாத கோயில் கோயிலாகாது: மூலமூர்த்தி யாவது சிலைவடிவினதாய் அட்டபந்தனஞ் செய்யப்பெற்று அசைவில்லாததாய் உள்ள மூர்த்தி; இது அசல மூர்த்தி எனப்படும். இந் நல்லூர்க் கந்தசுவாமி கோயிற் கர்ப்பக்கிருகத்தினுள்ளே இருக்கிற மூர்த்தி வெள்ளியினாலே செய்யப்பட்டதாய் அட்டபந்தனஞ் செய்யப் பெறுததாய் அபிஷேக மூதலியவைகளின் பொருட்டும் தன்னிடத்தினின்றும பிறிதிடத்துக்குப் பெயர்வதாய் உள்ள சலமூர்த்தி. இது மூலமூர்த்தியாகுமா?

'சேவலுங் கொடிமாண் றேருஞ்சிறை மணிமயிலும் தொன்னண்
மேவருந் தகரும் வேலும் வேறுளபடை கள்யாவும்
மூவிருமுகத்து வள்ளல் மொழிந்திடு பணிகளாற்றிக்
கோவிலின் மருங்கும் முன்னும் குறுகி வீற்றிருந்தமன்னோ!"

—வள்ளியம்மை திருமணப்படலம்.

இக்கோயிலிலே தாபிக்கப்பட்டுள்ள மூலமூர்த்தி உற்சவ மூர்த்தியாகிய ஆயுதவடிவம் அம்புவடிவமா? கந்தசுவாமி கையில் வேலாயுதவடிவமா? கந்தசுவாமி கை வேலாயுத வடிவம் எத்தனை பத்திர முடையது? எந்தெந்தப் பத்திரம் எந்தெந்தச் சத்தி வடிவம்? அவ்வேலாயுதத்தின் எந்தெந்தத் தானத்தில் எந்தெந்தத் தேவர் பாவிக்கப்படுவர்? ஆராயுங்கள். இக் கோயிலில் மூலமூர்த்தி உற்சவ மூர்த்தியாகிய நாயன் அம்பு, அவ்வம்புக்குப் படைக்கலமும் அடிமையுமாகிய அஸ்திரதேவர் கந்தசுவாமி கையில் வேலாயுதம்; அவ்வித வேலாயுதத்தைத் தன்கைப்படைக் கலமாகக் கொண்டது இங்குள்ள ஆறுமுகசுவாமி விக்கிரகம்; அவ்வாறுமுகசுவாமிக்கு முற்பூசை கொள்வது அவ்வம்பு.

நாயனையேயன்றி அவனுடைய படைக் கலத்தையும் அவனுடைய அடிமையையும் அவனெனப் பாவித்து வழிபடலாமேஎனின், நாயனுடைய மனைவியரை அவனுடைய அடியானுக்கு மனைவியராக நிறுத்தி வழிபடுவது அந்நாயனுக்கு உவப்பாகுமா? கந்தசுவாமியினுடைய தேவிமாராகிய தெய்வானையம்மை வள்ளிநாயகியம்மை இருவரையும் அவரடிமைக்குத் தேவிமாரெனக் கொண்டு அதனிருபக்கத்தும் நிறுத்தி வழிபடுவது அக் கந்தசுவாமிக்கு உவப்பாகுமா? இன்னும் நாயனும் அடிமையும் இருக்கிற ஓரிடத்திலே நாயனைப் பார்க்கினும் அவனடிமையை மிக நன்கு மதித்து வழிபடலாமா? ஆறுமுகசுவாமியும் அவரடிமையும் இருக்கிற ஒரு கோயிலிலே ஆறுமுக சுவாமியைப் பார்க்கினும் அடிமையை மிக நன்கு மதித்து வழிபடலாமா? அடியான் தானே தலைவனுக் உள்ளே வீற்றிருந்துகொண்டு பலருக்கு அருள் செய்யும்பொருட்டுத் தன் ஞயனை வெளியே செலுத்துவதுதான் நீதியா? ஆறுமுக சுவாமி உள்ளிருந்துகொண்டு அடிமையை வெளியே செலுத்துவ தொழிய அடிமை உள்ளிருந்துகொண்டு ஆறுமுக சுவாமியை வெளியே செலுத்துவதுதான் நீதியா?

[நாயன் - நாயகன், தலைவன்]

இக் கோயிலிற்போல இணுவில் முதலிய ஊர்களில் உள்ள கந்தசுவாமி கோயில்களிலும் மூல மூர்த்தி உற்சவமூர்த்தி வேலாயுதம் (அம்பு); ஆறுமுக சுவாமி விக்கிரகம் இங்கு வார்த்தமை கண்டபின் இணுவிற் கோயிலிலும் வார்க்கப்பட்டது: சிலாவிக்கிரகம் ஏற்றலும், கோயில் பிரித்துக் கட்ட உடன்படுதலும், கருங்கல் வந்தபின் உடன்பாடாது மறுத்துக் கலகம் விளைத்தலும், பிறவும் இப்பொழுது இங்கு கண்டாரன்றோ! இனி ஆங்கும் நடக்கும் நடக்கும். நடவாதொழிந்தால், அது கந்த சுவாமி கோயிலாகுமா? ஆகாதாகாது! இக் கோயிலுக்கு மாறுபடலாமா? என்பது நாவலர் கருத்து;

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

அடிக்கல் நாட்டுவிழா

—0—

தொல்புரம் மத்தி கொட்டடிப் பதிவாழ் ஆதி முத்துமாரி அம்மன் கோயில் அன்னதான மண்டப அடிகல் நாட்டு விழா நாளை (24-5-75) முற்பகல் பத்து மணியளவில் புலவர் நா. சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

சிவநெறிப்புரவர் க. கனகராசா அவர்கள் மண்டபத்திற்கான அடிக்கல்லை நாட்டுவாகள்.

இன்னிசை விரிவுரை

யாழ்ப்பாணம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதின குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகள் அவர்களால் இராக்ஷத வருடம் வைகாசித் திங்கள் 5-ம் நாள் (19-5-75) திங்கட்கிழமை தொடக்கம் 19ம் நாள் (2-6-75) திங்கட்கிழமை வரை தினமும் மாலை 6-15 மணி முதல் சபை மண்டபத்தில் பெரியபுராண இன்னிசை விரிவுரை நடைபெறும் என்று பொதுச்செயலாளர் அறிவிக்கின்றனர்.

சைவ சமயத்தவர்களின் விசேஷ பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

இராக்ஷத வரு வைகாசி மீ கூ உ வெள்ளி

ஒற்றுமைக்கே உள்ளன்பு

வேற்றுமையான கொள்கைகள் விபரீத எண்ணங்கள் மேலோங்கி வரும் வினைப்பயனை எங்கள் நாட்டு மக்கள் அநுபவித்து வருகின்றனர். மொழியென்றாலும் மதம் என்றாலும் வேறெந்த வழி என்றாலும் கருத்தொருமித்துக் கருமமாற்றுங் கடமையுணர்ச்சி நிலவாதிருப்பதை நோக்குமிடத்து இந்நிலைமை நீடிக்குமேயானால் நாட்டின் விருத்தி கேட்டில் முடியுமென்றே அஞ்ச வேண்டியிருக்கின்றது.

வேற்றுமையில்லாத காலம் இருக்கவில்லை. அவ்வித மயக்கம் இல்லாத நாடுமில்லை. இனங்களும் எப்பொழுதும் எதிர்ப்புக்குள்ளாகவே வாழ்கின்றன. ஆகவே ஒற்றுமை நிலவ வேண்டுமேயானால் உள்ளத்தில் உண்மை தோன்ற வேண்டும். தோன்றுங்கால் அன்பு நெறி யூன்றி விடும்.

சமரசம் என்று யாவரும் அடிக்கடி எண்ணுவார்கள். எடுத்தியம்புவார்கள்; ஆனால் சமமான முடிபு எழவேண்டுமேயானால் உள்ளததிற் கள்ளமில்லாத ஓர் ஒழுக்கம் இருத்தல் வேண்டும். 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசாமை வேண்டும்' என்று சான்றோர் கூறிப் போந்தனர். தூய வெண்ணம் தூண்டி விடச் சொற் சுத்தமுண்டாகிச் செயல்நயம் தானாகவே அமையும். இந்த உயர்ந்த ஒழுக்க நெறி நாட்டின் முறையாக மக்களின் வாழ்க்கைக் குறிக்கோளாக அமைதற்குச் சமய வளம் நன்கு மிளிர வேண்டும்.

நாவலர் பெருமான் நமக்கெல்லாம் இந்த வழியைப் பலதொன்னூல்களைத் துருவியாராய்ந்து பொழிப்புரைத்தும் ஊக்குவித்தனர் அந்த உணர்ச்சி எம்மிடம் இப்பொழுது அற்றுப்போய்விட்டது போலும்.

திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் திருவாய்மலர்ந்த திருவலிவலத் தலத் தேவாரப் பதிகத்திலடங்கிய கருத்துக்கள் இங்கே பொருத்தமாகின்றன.

"ஒல்லையாறி உள்ள மொன்றி என்ற"

செந்தமிழ்ச் செஞ்சொற்களமைந்த தேவாரத்தை நோக்குவோமாக.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை

(1-ம் பக்கத்து - வளர்ச்சி)

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் புராணம் சோதியுட்கலத்தல
12-30 — 1 மணி விசேட பூசை
1 மணி — மகேசுரபூசை

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் விழா

மாலை:- 6-30 மணி:

தலைவர்: திரு. த. சோமசுந்தரம் அவர்கள்

1. தேவாரம்:- 6-30
2. தேவாரப் பண்ணிசை 6-30 — 7-00
3. தலைவர் முன்னுரை
4. பேச்சு
   தேவதேவி இராசதுரை (யாழ் சன்மார்க்க மாவித்தியாலயம்)
5. 'திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் சைவத் தொண்டு"
   இ. கந்தையா B A. அவர்கள்
   (இளைப்பாறிய தலைமை ஆசிரியர் நாவற்குழி மகாவித்தியாலயம்)
6. நன்றியுரை
7. தேவாரம்.

சைவாபிமானிகளை சமூகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம், 20-5-75.

வை. இரகுநாதமுதலியார்
செயலாளர்.

தங்கப் பதக்கப் பரிசு

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையார் 1974 ல் நடாத்திய சைவ சமயமாடப் பரீட்சை.





10-ஆம் வகுப்பு

1 சிவமணி சிவசுப்பிரமணியம்
(வேம்படி மகளிர்கல்லூரி யாழ்ப்பாணம்)

9-ஆம் வகுப்பு

2. கிருஷ்ணானந்தி - சோமசுந்தரம்
(தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி)

8-ஆம் வகுப்பு

3 அநுஷ பவானி. இ
(வேலணை மத்திய மகா வித்தியாலயம்)

குடியரசுத் தினம்

குறிப்பான அமைதி

உத்தியோக பூர்வமான கொண்டாட்டங்கள் ஆடம்பரமற்றனவாயமைந்தன.

தமிழர் கூட்டணியின் எதிர்ப்பு இயக்கம் பொறுமையாக நடைபெற்றது. கடையடைப்பு முதல் நாளும் குடியரசுத் தினத்திற் பொதுக் கூட்டம் கட்சி அலுவலக முன்றலிலும் ஒழுங்காக நடைபெற்றன.

கண்ணியம் வாய்ந்த கல்லூரி அதிபர்

[யாழ். இந்துக் கல்லூரி என்றும் எழில் மிக்க அதிபர்களின் தலைமையில் இயங்கி வந்திருக்கின்றது; வருகின்றது. திருவாளர்கள்: செல்வத்துரைப்பிள்ளை, சஞ்சீவராவ், சிவராவ், குமாரசுவாமி, ஆசைப்பிள்ளை சி. சபாரத்தினம், ந. சபாரத்தினம் என்ற நெடுந் தொடர் நெறியாக விளங்கி வந்தமை கல்லூரியின் வரலாற்றின் பெருமைக்குரியது. சென்ற திங்கள் இவ்வுலக வாழ்வு நீத்த அதிபர் திரு சபாரத்தினம் அவர்கள் கல்வித் திறமையுடன் பண்புச் சிறப்புமுடையவர். கல்லூரியின் பாரம்பரிய செல்வத்தைப் பாதுகாத்து ஈழத்தின் இணையற்ற கலை இல்லமாய் அமையமுன் சென்றவர்களின் முயற்சியைத் தொடர்ந்து முன்மாதிரியாய் புழைத்து நற்பயன் விளைவித்தவர். சைவ பரிபாலன சபை இயக்கத்தின் அங்கமாய்த் தோன்றிய கல்லூரிக்கதிபர் என்றால் அப்பதவி பெருமையுடைத்தன்றோ? சபைக்கும் அவ்வப்போது தொண்டு புரிந்து வந்த இப் பெரியாரின் மறைவு குறித்து இந்துசாதனம் வருந்துகின்றது. இப் பெரியாரது குண நலங்களை எடுத்து விளக்குகின்றார் சிந்தனையாளர் 'தேவன் — யாழ்ப்பாணம்' அவர்கள். ப-ர்.]

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை கல்லாலும் மண்ணாலும் கட்டி யெழுப்பியவர்களை நாம் நன்கறிவோம். ஆனால் கலைக் கோபுரமாக அழகுபடுத்தியவர்களை நினைத்துப் பார்ப்பதில்லை. அவர்களுள் வலுவான தூண் போன்றவர் அண்மையில் அமரத்வம் எய்திய சி. சபாரத்தினம் ஆவர். கல்லூரியின் நிர்வாகக் கட்டடம் அவர் பெயரால் நிறுவப்பட்டிருந்தாலும் அவர் பயிற்றி வெளியேறிய மாணவர் நெஞ்சில் அவருக்கு நிரந்தரமான இடம் உண்டு. அவரிடம் கற்றவர் அவரை மறக்கவே முடியாது அத்தகைய ஈடுபாட்டையும் பிணைப்பினையும் ஏற்படுத்தக்கூடியவர். அவருடைய மறைவுடன் ஒரு பரம்பரை, ஒரு சகாப்தம் முடிவடைகிறது. அவரைப் போல் விசுவாசமான உழைப்பும், கடமையுணர்ச்சியும் மாணவர் நலனில் அக்கறையும் கொண்டவர்கள் அருகி வருகின்றனர்.

அவருடைய வாணாளில் அரைவாசிக்கு மேல் இந்துக் கல்லூரிக்கே சமர்ப்பணமாயிற்று. ஓய்வு பெற்ற பின்னரும்கூட உடல்நலம் குன்றும்வரை கல்லூரி விருத்தியில் மிகுந்த அக்கறை காட்டி வந்தார். மாணவனாய், ஆசிரியராய், உதவி அதிபராய், கடைசியாக அதிபராய் அவர் வாழ்க்கை பூராவும் கல்லூரிக்காகவே உழைத்தார். அதிகம் பேசமாட்டார். அர்த்தத்தோடு அழுத்தமாக அளந்தே பேசுவார். நறுக்குத் தொனிக்கும். சட்டம், நியதி,

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

தருமை ஆதீனத்தில் தாபகர் குருபூசைவிழா

(நமது சிதம்பரம் நிருபர்)

திரு தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீல ஸ்ரீ, சணமுகதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீ ல.ஸ்ரீ. சணமுக தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆதீனஸ்தாபகர் ஸ்ரீ ல. ஸ்ரீ. குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவையும் ஸ்தாபகர் ஜீவசமாதியாக எழுந்தருளிக் காட்சி அளித்துவரும் ஸ்ரீ ஞானாம்பிகாசமேத ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் தேவஸ்தானம் மகோற்சவத்தையும் சிறப்பாக நடத்தி வைத்தார்கள்.

வைகாசி 16 ஆம் நாள் ஸ்தாபகர் குருபூசைவிழாவும் மறுநாள் ஸ்ரீ ல.ஸ்ரீ. குருமகாசந்நிதானம் அவர்களின் பட்டணப்பிரவேசக் காட்சியும் நடைபெறும்

10 நாளும் திருநெறியத் தெய்வத் தமிழமாநாடும் சித்தாந்த சமய சாத்திர பாடப் பயிற்சி வகுப்பும் நடைபெறும்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வழ: இல. M. B. 10198
உரும்பிராய் (1) தம்பு சவசுப்பிரமணியம்
(2) பெண் தங்கரெத்தினம்
எதிராக — வழக்காளிகள்
நாயன்மார்கட்டு யாழ்ப்பாணம் கந்தர் துரைசாமி —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M. B. 10198-ம் இலக்க வழக்கில் எனச்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1975-ம் ஆண்டு ஆனி மாதம் 5 ம் திகதி (5-6-75) முற்பகல் 10 00 மணிக்கு அநதக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை முதல் வட்டி ரூபா 1613.00 இன்னும் ரூபா 1000/- த்துக்கு 6-8-68 தொடக்கம் 5-9-69 வரை 12 வீத வட்டியும் அதன் மேல் முழுத தொகை இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 259.01 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளி கோயிற்பற்று சிவியாதெரு இறை பர. நி. இலா 4, இதில் வடக்குப் பக்கமாக பர நில. இலா 2 செய் பயிர் வான் பயிர் கிளக்கிலிருக்கும் பிரதான ஒளுங்கைக்குப் போக்கு வரத்துச் செய்வதற்கு தெற்கெல்லைக் காணியின் கிழக்கெல்லை ஓரமாகச் செல்லும் 10 அடி அகலமுள்ள ஒழுங்கையில் ½ பங்கும், இதற்கெல்லை கிழக்கு வேலன் நாகமணியினதனம். வடக்கு சின்னத்தம்பிக்கும் பெண்தையலம்மாவுக்குமுரிய வாதனம். மேற்கு கதிரவேலு சின்னத்தம்பிக்குரியவாதனம். தெற்கு ஆறுமுகம் அப்புக்குட்டிக்கும் பெண் அரியமலருக்குமுரியவாதனம். பதிவிலக்கம் D 300/266.

செ. விசாகரெத்தினம்
கொமிஷனர் விலைமதிப்பாளர்

133 பருத்துறை ரோட்
நல்லூர் யாழ்ப்பாணம் 25-3-75

19 23-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசகசுவாமிகள் அருளிய

திருவாசகம்

— புலவர் சிவங். கருணாலயபாண்டியனார் அவர்கள் —

(முன் வளர்ச்சி)

உனக்கு: உன்பால்: இடப்பொருள் ஏற்றப்பொருளாக்கப் பட்டது. வேற்றுமைப் பொருள் மயக்கம் உருபுமயக்கமன்று.

கழல்காட்டி யென்றது கழலைக்காணச் செய்வதென்றவாறு. காட்டியென்பதற்கேற்ப மடக்காது நீட்ட நீண்டகழலென்றார்.

நாயிற்கடையாய்க் கிடந்தவென்றது உயர்வு நவிற்சிக்கு மறுதலையாகிய இழிவு நவிற்சி. பணிவு மிகுதி குறிக்குங்கூற்று:

நாயினுமென்னும் இழிவு சிறப்பும் மையுந் தாயினுமென்னும் உயர்வு சிறப்பும்மையுந் தொகுத்தலாயின.

நாய்க்குற்ற இழிந்தவியல்பெல்லாம் உடையேனாதலன்றி அதற்கற்ற உயர்ந்தவியல்பொன்றுமில்லே னென்னுங் கருத்துப் பற்றித் தம்மை நாயினுங் கடையென இழித்துரைத்தார்.

எஞ்ஞான்றும் பிரிவின்றிப் பிறப்புத்தொறும் உறுதுணையாகி யுற்றுழியுதவுதலும் ஊனினையுருக்கி யுள்ளொளி பெருக்கி உலப்பிலாவானந்தமாய தேனினைச் சொரிதலுந் தாய்க்கின்மை பற்றித் தாயுனுஞ் சிறந்த தத்துவனென்றார்.

தயா, அருள் இவ்வடசொல்லும் இயற்சொற்போலக் குறியதன் கீழாக் குறுகித்தய வெனவருதலுமுண்டு.

இறைவனதருட்பிழம்பு மன்னுயிரெல்லாம் வீடெய்துங்காறும் தானொடுங்கா தெவ்வுயர் மாட்டும் எஞ்ஞான்று மொப்ப நிலைபெற்றிருத்தலின் அதனைத் தத்துவமென்றார்.

தத்துவம், பொருண்மை தத்துவன்; தத்துவமாயிருப்பவன்.

தத்துவம் பலவுளவெனினும் அவையெல்லாம் அழிதன் மாலையவாமெனவே தத்துவமெனப்படுவது திருவருளன்றியில்லையாம்.

(வளரும்)

நாவலரும் - கோயிலும்

(1- ஆம் பக்கத்து வளர்ச்சி)

எத்தனையோ கட்டிடத்தின் பின் இப்பொழுதுதான் கர்ப்பக்கிரகத்தில் (மூலஸ்தானம்) சிலா விக்கிரகம் தாபிக்கப் பட்டது.

அநுராதபுரக் கதிரேசன் கோயிலிலும் கர்ப்பக்கிருகத்தில் அம்பு வடிவம் இருந்தது. இப்பொழுது அக்கோயில் இடம் பெயர்ந்து கர்ப்பக் கிருகத்தில் சிலா விக்கிரகம் அமைத்துக் கொண்டது.

தன்னைப் பின்பற்றிய கோயில் எல்லாம் போதிய பாடம் படித்துத் திருத்தமுற, தான் மாத்திரம் திருந்தாதிருப்பது நம் வினைப் பயனேயாம். இன்னும் எத்துணைக் காலங் கழியுமோ? கலி விசேஷம் எப்படியாமோ!

வைரவர் கோயில் இருக்க வேண்டிய தானம் எது? வைரவர் எந்தத் திக்குமுகமாகப் பிரதிட்டை செய்யப்படல் வேண்டும்? வைரவர் பொருட்டு விக்கிரகந் தாபியாது சூலாயுதந் தாபிக்க விதி என்னை? இரும்பினாலே விக்கிரக முதலியன செய்து வழிபட எங்கேனும் விதியுண்டோ? விசாரியுங்கள். விதியுண்டாயின் வேலாயுத முதலியவைகளும் இரும்பினாற் செய்து கொள்ளலாமே.

விதி இருக்கினும் இல்லா தொழியினும் இக்கோயிலிலே ஆதியில் வழங்கிய வழக்கப்பிரகாரமே எல்லாம் நடத்தல் வேண்டும். அவ்வழக்கத்துக்கு மாறாக ஒன்றும் செய்யலாகாது என்கிறார்கள். ஆதிவழக்கப்பிரகாரம் நடத்தல் வேண்டுமென்றே நாம் போதிக்கிறோம். அவ்வழக்கத்துக்கு விரோதமாகவே இக்கோயிலார் நடக்கிறார்கள். எப்படியெனிற் பேசுவோம். இக்கோயில் இருக்கிற தானத்திற்றான். இத்தானத்திற்குச் சமீபத்திற்றான், இக்கோயிலுக்கு முன் ஒரு கந்தசுவாமி கோயில் கட்டப்பட்டு, நெடுங்காலம் பிரசித்தி பெற்றிருந்து. பறங்கிக்காரால் இடிபட்டொழிந்தது. அதற்குப்பின் இக்கோயில் உலாந்தர் காலத்திலே கட்டப்பட்டது. இக்கோயில் வழக்கம் முன்னைக் கோயில் வழக்கத்துக்கு ஒத்ததா மாறுபட்டதா? மாறுபட்டது. ஒன்றுக்கொன்று மாறுபட்ட இரண்டு வழக்கமுங் கொள்ளத்தக்கனவா? அல்ல; அவைகளுள் ஒன்று கொள்ளத்தக்கது ஒன்று தள்ளத் தக்கது நல்லது; முன்னைக் கோயில் வழக்கம் இக்கோயில் வழக்கம் என்னும் இரண்டினுள்ளும் எது கொள்ளத்தக்கது எது தள்ளத்தக்கது? ஆராய்வோம் முன்னைக்கோயில் வழக்கம் எப்படிப்பட்டவராலே தாபிக்கப்பட்டது? வேதஇவாகம வழக்கம் பெரிதுடைய தமிழ் நாட்டினின்றும் வந்த பிராமண குலோத்தமரும் சைவராசாவாகிய சங்கையாரிய சக்கிரவர்த்திக்கு முதன்மந்திரியாரும், வேதமுதலிய நூல்களில் அதிசமர்த்தருமாகிய புவனேகவாகுவினாலே தாபிக்கப்பட்டது. இக்கோயில் வழக்கம் எப்படிப்பட்டவராலே தாபிக்கப்பட்டது? ஒருவரேனுஞ் சைவசமயத்தை வெளிப்பட அநுட்டிக்க இயலாத உலாந்தர்காலத்து கச்சேரியிற் சிறுப்பாராயிருந்த ... இரகுநாத மாப்பாணராலே தாபிக்கப்பட்டது. ஆகவே எவ்வழக்கங் கொள்ளத்தக்கது? எவ்வழக்கந் தள்ளத்தக்கது? நீங்களே சொல்லுங்கள் முன்னைக் கோயில் வழக்கம் எந்தப்பிரகாரம் அமையப் பெற்றது? கட்டடம் விக்கிரகப் பிரதிட்டை, பூசை, திருவிழா முதலிய எல்லாவற்றாலும் சிவவாக்காகிய ஆகமத்துக்கும், அவ்வாகமத்தைச் சிரமேற்கொண்ட தேவர்கள் முனிவர்கள் முதலாகிய பெரியோர்கள் வழக்கத்துக்கும் ஏற்ப அமையப்பெற்றது இக்கோயில் வழக்கம் எந்தப்பிரகாரம் அமையப்பெற்றது? கட்டடம் முதலிய எல்லாவற்றாலும் அவ்வாகமத்துக்கும் அப்பெரியோர்கள் வழக்கத்துக்கும் விரோதமாக அற்ப மனுஷநுடைய மனம் போன படியே அமையப்பெற்றது. ஆகவே எவ்வழக்கங் கொள்ளத்தக்கது? எவ்வழக்கந் தள்ளத்தக்கது? நீங்களே சொல்லுங்கள் 'முன்னைக் கோயிலுக்கும் இக்கோயிலுக்குஞ் சம்பந்தமில்லை இக்கோயிலில் ஆதி வழக்கமே கொள்ளத்தக்கது'' என்பீர்களாயிற் பேசுவோம். 'முன்னைக்கோயில் வழக்கத்துக்கும் இக்கோயில் வழக்கத்துக்குஞ் சம்பந்தமில்லையென மறுத்து அதனைத்தள்ளி, இதனையே கொள்வோம்'' என்னும் இக்கோயிலார்கள், இக்கோயின் மகோற்சவகாலத்திலே முன்னைக் கோயிற்றாபகராகிய புவனேகவாகு பெயரை முன்னும், இக்கோயிற்றாபகராகிய இரகுநாத மாப்பாணர் பெயரை அதன்பின்னும் உச்சரிப்பது உலகறியுமே. ஆகவே, முன்னைக் கோயிலுக்கும் இக்கோயிலுக்குஞ் சம்பந்த முண்மை பெறப்படும், படவே அவ்வழக்கத்துக்கு ஒத்த வழக்கம் உண்டாயின் அதுவே கொள்ளத்தக்கது என்பதும், அதற்கு மாறுபட்ட இவ்வழக்கந் தள்ளத்தக்கது என்பதும் பெறப்படும்.

(வளரும்)

கண்ணியம் .....

2-ஆம் பக்கத்து வளர்ச்சி

ஒழுங்கு, கண்டிப்பு — இவை அவருக்குப் பலருடைய அனுதாபமின்மையைத் தேடிக் கொடுத்திருக்கும், அதனால் நஷ்டம் அவருக்கு. ஆனால் கல்லூரி நிர்வாகத்துக்கு மதிப்பு.

கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்தவராயினும் கைப்பிரம்பை நம்பியவரல்ல. தண்டனை மூலமே மாணவரை வழிப்படுத்தலாம் என்று நினைத்தவரல்ல. கற்பித்தல் மாத்திரமல்ல, மாணவரிடம் காட்டும் கரிசனை அவர்களுடைய நம்பிக்கையையும் மதிப்பையும் ஈட்டிக்கொடுக்குமென்பதற்கு இவர் சான்று; ஆசிரிய உலகுக்கு இவர் ஒரு ஆதர்சம், வழிகாட்டி, முன்மாதிரி மாணவர்களோடு அவர் கொண்டிருந்த தொடர்பு கல்லூரி வாழ்க்கைக்கு அப்பாலும் நீடித்தது. அவர்களுடைய வளர்ச்சியையும் அந்தஸ்தையும் தன் சேவைக்குக் கிடைத்த சன்மானமாய் மதித்து இறுமாந்தவர்.

வகுப்பில் பின் தங்கிய மாணவனை அலட்சியம் பண்ணிப் பாடத் திட்டத்தை முடித்து விட்டால் கடமை தீர்ந்தது என்று கையை விரிப்பவரல்ல. அவர்களுடைய மட்டத்தில் நின்று களைப்பையும் சலிப்பையும் பொருட்படுத்தாமல் அவர்களைக் கைதூக்கி விட்டவர். அவருடைய போதனைத் திறமை அவருக்கு 'மத்ஸ் சபான்' என்ற செல்லப் பெயரைச் சூட்டத் தூண்டியது.

தூய வெள்ளை உடையும் சிகரட் புகைப்பவர்களுக்கு ரிய செருமலும் அவருக்கே சொந்தம். சாயங்காலம் யூனிட் டெட் கிளப். பகல் முழுவதும் கல்லூரி — மணிக்கூட்டு வாழ்க்கை பல்கலைக் கழகத்தில் உதைபந்தாட்டக் குழுத் தலைவர், டென்னிஸ் ஆட்டக்காரர், 'பிரிட்ஜ்' (கடதாசி) விளையாட்டில் புலி — இவை அவருடைய பல முகங்கள். இவற்றுக்கூடாக ஒளிர்பவை அவருடைய நேர்மையும் நிதானமும். படபடப்பில்லை. ஆடம்பரமில்லை. மேளதாளமில்லாத மௌன சாதனைகள்.

இந்துக் கல்லூரிச் சாரணர்களும் பொலீஸ்படையில் குழுவினரும் முன்னால் அணிவகுத்துச் செல்ல, மாணவர்கள் வீதியில் இருமருங்கும் நிற்க பழைய மாணவர் அவர் உடலைக் கல்லூரியைச் சுற்றிச் சுமந்து சென்ற காட்சி ஒருவர் ஆற்றும் நற்செயல்களைச் சமூகம் மறந்துவிடுவதில்லை என்பதற்கு அத்தாட்சி.

உயர் பதவி வேட்டையைத் துறந்து தியாக வாழ்வு வாழ்ந்தமைக்கு இந்து தமிழ்ச்சமூகம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது.

அவருடைய ஆன்மா சாந்தியடைக!

—

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இல: T. R. 139

தர்ம சாதன மகோதா பிரிவு 42-ம் பிரிவு 2 இன் கீழ் ஒ விண்ணப்பம் காரணமாக

1. மானிப்பாய் நவாலி முதலியார் வைத்திலிங்கம் மகேச
2. இரத்மலானை இந்துக் கல்லூரி ஒழுங்கை "விடிவெள்ளி" சிவசம்பு கருணாநிதி
3. தெல்லிப்பளை சின்னத்தம்பி நாகலிங்கம்
4. மானிப்பாய் நவாலி தெற்கு எஸ், தர்மலிங்கம்
5. சுன்னாகம், கந்தரோடை தியாகராஜ சிவகுருநாதன்
6. யாழ்ப்பாணம் கச்சேரியடி 1-ம் ஒழுங்கை இல. 3. நாகநாத மாணிக்கம்;
7. காங்கேசந்துறை தையிட்டி கலைவாணி வீதி இல 304 இளையதம்பி இராமலிங்கம்
8. மானிப்பாய் நவாலி தெற்கு விஜயரத்தினம் இராசையா
9. காரைநகர் தையமன்னவர் இல்லன் குமாரவேலு சுப்பிரமணிய
10. கொள்ளுப்பிட்டி, முகாந்தரம் வீதி இல 42 கந்தவனம் நித்தியானந்தன்.
11. காங்கேசந்துறை புதிய டிரேடிங் கம்பனி சுப்பிரமணியம் கிருமூர்த்தி
12. வட்டுக்கோட்டை அராலி தெற்கு கணபதிப்பிள்ளை சுபரத்தினம்
13. யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை, பெரியதம்பிரான் வீதி இல 52/4 முத்துக்குமாரு கிருஷ்ணமணி
14. வவுனியா சங்கக் காரியாலயம் தம்பி பஞ்சாட்சரம் நடராஜ
15. அச்சுவேலி பத்தைமேனி பொன்னம்பலம் இராஜகுலசேகரம் பிள்ளை செல்லத்துரை.
16. தெல்லிப்பளை, புகையிரத வீதி குலத்துங்கா கதிரையாண்டி
17. வட்டுக்கோட்டை, அராலி தெற்கு இளைப்பாறிய ஆசிரியர் கனகசபை நமசிவாயம். — விண்ணப்பதாரர்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் T. R 139 ம் இலக்க வழக்கில் 14-3-75ம் திகதி கோடு தீர்த்த தீர்வை யின்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை விலை ரூபாய் 3125/- க்கு கீழ்ப்படாமல் 1975 ம் ஆண்டு ஆனிமாதம் 18 ம் திகதி (18-6-75) முற்பகல் 10-00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணியின் விபரம்

வடமாகணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பிரிவு புத்தூர் கோயிற்பற்று பத்தைமேனியிறை மீசையையோடை" பிரிவிடப்படாத பர. நில. இலா 3- குளி 14½ அதை சேர்ந்தவைகளும் தென்மேற்கில் இருக்கும் கிணற்றில் பங்கும் வளமையான வழிவாய்க்கால் உருத்தும் இதில் பர. நில, இலா 4 குளி 0 இதற்கெல்லை கிழக்கு மூத்ததம்பி செல்லமுத்துவுக்கும் காசிப்பிள்ளைக்கும் இரத்தினசாமிக்குமுரியவாதனம் வடக்கு கதிரையானந்தனுக்கும் சகோதரர்களுக்குமுரிய வாதனம் மேற்கும் தெற்கும் நல்லதம்பி பெண் அன்னம்மாவின் ஆதனம்

அ. போ எதிர்மனசிங்கி
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

14 டேவிட்ரோட்
யாழ்ப்பாணம் 14-5.75

17 23-5

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ இல: M. B. 12163

1. இராசையா செல்லத்துரையும்
2. பெண் வேலம்பிகாய் இருவரும் காரைநகர் வடக்கு காரைநகர் —வழக்காளிகள்

எதிராக

1. யாழ்ப்பாணம் நல்லூர் பருத்தித்துறை வீதி ஆனைக்குட்டி ஒழுங்கை சின்னத்தம்பி சிவக்கொழுந்து
2. யாழ்ப்பாணம் நல்லூர் நாகலிங்கம் கோபாலசிங்கம் எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 12163- ஆம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1975 ஆம் ஆண்டு ஆனி மாதம் 12-ஆம் திகதி (12—6—75) வியாழகிழமை முற்பகல் 10.00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:

தீர்வைத் தொகை முதல் வட்டி ரூபாய் 2800-00 ம் 24-11-70 தொடக்கம் 19-6-71 வரைக்கும் ரூபா 2000-00க்கு 12 வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 303-90 சதம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பிரிவு நல்லூர் கோயிற்பற்று நல்லூர் இறை பெரியபனம் தோட்டம் சுடுகாடு புலமும் புது வழவு நில இல 4 குளி 3 3/8 இன்னும் ஷெயிறை பர.நில- இலா 4 குளி 8 7/10 இருதுண்டுகளும் ஒன்றாய்கூடி பர-நில- இலா 8 குளி 12 3/40 ஆனால் உத்தரவு பெற்றஉலாந்தா J. D. வீரசிங்கமவர்களின் 18-12-60 தேதி உடைய இல 2711 கொண்ட உலாந்த படத்தின்படி பர- நில- இலா 8 குளி 16¾ இதடங்கலில் ஷெ படத்தில் முதலாம் துண்டாக காட்டப்பட்ட காணிக்கு கிழக்கால் பிரிவிடப்பட்ட பர-நில-இலா 3 பயிர்வகையுடன் தெற்கெல்லை காணியில் மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும் துலா ஆடுகால் தூர்வை முதலாம் துண்டாக காட்டப்பட்ட மிகுதி காணியின தெற்கெல்லை யோரமாகவும் ஷெ படத்தில் இரண்டாம் துண்டாக காட்டிய எஞ்சிய காணியில் மேற்கெல்லையோரமாக பருத்தித்துறை ரோட்டுக்குக் கையொழுங்கையால் செல்வதற்கும் உருத்தும் இப் பர. நில. இலா 3க்கும் எல்லைகள் கிழக்கும் வடக்கும் வியாகேசு பெண் அம்மணிப்பிள்ளையினதனம் மேற்கு வேலு சின்னத்தம்பியினதனம் தெற்கு க. கிட்டினு பெண் பாக்கியத்தினதனம் பதிவிலக்கம் D 388/42

அ. போ எதிர்மன்னசிங்கி
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

14, டேவிற் வீதி
யாழ்ப்பாணம் 21-4.75

18 23-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THOUGHTS TO BE TREASURED

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்,
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்,
கூடும் அன்பினிற் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்.

Blessed are they, transcending the effects of adversity and prosperity; clay and precious gold they view alike; through abounding love spontaneous is their worship; (spiritual) heroes they are, praying (not for boons) not even for heavenly Bliss

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாதனின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

Hindu Organ

FRIDAY, MAY 23, 1975

Whistling for the Wind !

Providing a solution to existing problems is what every religion seeks to endeavour; movements outside the sphere of religion also strive to obtain redress of grievances. Thus the common aim of man individually or collectively, in the name of religion or anything else, cannot be but the realisation of relief from adverse circumstances.

Religion has been the exclusive means for man to develop his sense of seeing the image of Truth and to proceed to the task of enjoying complete liberation from all that is worldly. Centuries have collapsed in chaos, millennia have finished up in misery and eras have ended in errors despite the fact that the greatest teachers of religion have expounded theories teaching the true tenets of ideal life. The worry-worn world shamefacedly stands sorrow-stricken with misery and poverty scaring the people leaving them hopelessly humiliated and helplessly hunched. And why is this tale of woe continuing ?

Progress is a watchword that is being popularly used by movements. What is the progress that has been made so far ? Will poverty and misery preponderate if even some progress has been made. The answers to these enquiries will reveal the existence of pit falls, faulty moves, insincere efforts and similar snags. The tub-thumping crusades, the socalled progressive movements all stand ridiculed by the roaring surge of sinful acts in the form of mass mischief — rampages, ravages, murders by marauders in every nook and corner of this enlightened ! earth. Are these movements, all popular and progressive, whistling for the wind, for the favourable turn of the weather that would never be a fact ?

The only conclusion that can be drawn from these disturbing trends is that men of religion, men who feel pity for the miserable and the poor, men who are true devotees of Truth, must be prevailed upon to lead these movements in the manner the Great Saivakuravars of the glorious past did in restoring the rule of Saiva practice in Tamilakam.

The Late C. Sabaratnam

(THEVAN)

The demise of C. Sabaratnam, Emeritus Principal of Jaffna Hindu College draws the curtain on the era of dedication and devotion to duty. His life was clock-work, centred round Jaffna Hindu College, the premier Hindu institution in Sri Lanka. It would not have attained this enviable position if not for the self-less service rendered by men of the calibre of "Maths-Saban."

As this endearing term indicates he was first and last an efficient teacher. He descended to the level of the weakest student and laboured hard to raise his standard, It was thus he achieved the affection and respect of all those who had the good fortune to study under him. He had perfect class control and ensured perfect discipline without the aid of a cane.

It was his genuine interest in the welfare of his charges that won him the confidence and co-operation of his pupils. He had a knack of inspiring respect and admiration. He was a man of few words. Though it sounds paradoxical, it was not his free-mixing but his aloofness that made him popular.

His interests were varied. He captained the University College Foot ball team, played Tennis regularly and was an ardent Bridge player. But these never made him deviate from his sole aim— the enrichment of the glory of his alma mater to which he was wedded for life. As teacher, vice-principal and principal he performed his duties meticulously and zealously, There was no trumpet and fanfare around him.

Quiet and unassuming, diligent and hard-working, simple yet elegant, he was firm and strong. He was always fair and just. He stuck to principles and thereby earned the displeasure of a few.

Even after retirement, until his ailment became serious, he regularly attended all functions at the college and made frequent visits. Such was his attachment to the institution which made him and in turn which he built up.

The coffin being carried around the college by old students with the police cadets and scouts heading the procession with the present pupils lined upon either side of the roads was ample testimony to the gratitude the college had for a man who had sacrificed his life for its growth.

The entire Hindu Tamil community owes a deep debt to him who never aspired for more lucrative jobs or personal glory but spent his entire life time for the cause of education.

May his soul rest in peace.

Republic Day Restrained Activities

The official celebrations of the Republic Day were as unostentatious as possible.

The protest of the Tamil United Front was on a restrained note. Hartal was observed the previous day and a protest meeting was held at the Head Quarters of the T. U. F.

Farewell to Retiring Principal

Mr. V. Anandasangaree M. P. Kilinochchy who presided over a farewell function held at Kalaveddithidal Nagesvara Vidyalaya Hall to honour Mr. R. T. Subramaniam Principal who retires after 38 years service said that Mr. Subramaniam a disciple of Panditamany S. Kanapathipillai, turned out many outstanding Saivites who are rare now and that teachers should emulate Mr. Subramaniam and build up a Saiva tradition formulated by Pandit S. Kanapathipillai at Tirunelvely. Several others also paid glowing tributes to him.

PeriyaPuranam Musical Discourse

Sri La Sri Swaminatha Thesiga Gnanasambantha Swamigal of Nallur Aatheenam will deliver a series of musical discourses at the Colombo Vivekananda Society Hall from 19-5-75 to 2-6-75 daily on 'Periyapuranam'.

About Our Journals

(From the Silver Jubilee Number of the Hindu Organ)

(Reproduced on a suggestion of Sri S. Sivasubramaniam of Colombo who has an abiding interest in the affairs of the Sabhai and its Journals)

The Hindu Organ was founded in September 1889 by the Saiva Paripalana Sabhai and is still its property. Mr. T. Chellappapillai, who was not only a great jurist but also a renowned mathematician and eminent English, Sanskrit and Tamil Scholar, undertook to edit the English pages of the fortnightly Anglo-Tamil paper, as a labour of love, without pay; and Mr. T. Kailasapillai, nephew of Sri la Sri Arumuga Navalar, became unpaid Manager of the "Hindu Organ" and its Tamil Editor.

Mr. Chellappapillai, owing to failing health, relinquished his connection with the paper in the beginning of 1891, although he retained the presidentship of the Saiva Paripalana Sabhai till his death, which occurred in May 1902. At the instance of Mr. Advocate S. Nagalingam, who took special interest in ensuring the continued existence of the Hindu Organ, Mr. A. Cathiravelu, Proctor, and now an unofficial member of the Jaffna Local Board since its establishment, and Mr. A. Sabapathy, the present Editor, joined the staff as unpaid joint Editors.

(To be continued)

Bharatha Dance Debut

Kumari Kalaichelvi Sabalingam's Scintillating Performance

It was a grand evening —the 20th of May 1975— at the Veerasingam Hall when Kumari Kalaichelvi Sabalingam made a debut with distinction ably assisted by the Vidvans of Mirudangam, Violin and Flute. The various items were well applauded, the Chidambara Natesa Kautivan evoking great enthusiasm.

Prof. P. Kanagasabapathy of the Jaffna Campus paid a glowing tribute to the debutant and to the proud father, a great exponent of literary activities.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarpannai, Jaffna on Friday May 23, 1975.
EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org